முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 749**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

1. தர்மசக்தி கொண்ட அரங்கனே — 17.10.2021, ஞாயிற்றுக்கிழமை
   தரணிகாக்க வந்த தேசிகனே
   வறுமை போக்கி உலகமக்களை
   வாழ்வாதாரம் குன்றா நல்வழிகாட்ட
2. வழிகாட்ட வந்தநல் குருராஜனே
   வடிவேலன் என் அவதாரமான தேசிகனே
   தெளிவூட்டி சுப்ரமணியப்பெருமான் யான்
   தேசிகன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
3. ஆசிதனை பிலவ தரிவை திங்களில் உரைப்பேன்
   (பிலவ வருடம் புரட்டாசி மாதம் 31ம் நாள், 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை)
   அரங்கனே ஞானபலம் கொண்ட தேசிகனே
   அறமெனும் சூட்சும சக்திவழி உலகமக்களை
   வரம்தந்து காக்க வந்த ஞானியே வள்ளலே உந்தன் வழி உலக மக்கள் வர
4. வருகின்ற அந்த காலம் தொட்டு
   வையகத்தில் புதுமை நடக்கும்
   தருகின்ற உன் தர்ம பங்களிப்பு மூலம்
   தரணியோர்க்கு பெரும் பாதுகாப்பு உண்டாகும்
5. ஆகவே அரங்கனை கண்டுகொண்ட மக்களே
   அகிலத்தில் அழியாமை பெற்று உயர நேரும்
   மிகைபட அரங்கன் தர்மத்தை கவனித்த மக்களே
   மேலான பொருளுதவி செய்து கொண்டு உயர் தொண்டாற்றும் அன்பர்களே
6. அன்பர்களே கலி யுகத்தில்
   அரங்கன் ஆசியோடு அழியாமை பெற்று
   இன்பமுற இனிபிறவாத பெரும்பேற்றை
   ஈதூழே அடைந்து சிறக்க நேரும்
7. நேர்மை கொண்டு அரங்கனுக்குள் ஆறுமுகன் யான்
   நித்தம் நித்தம் அற்புதம் நிகழ்த்த
   பெருமை கொண்டு அரங்கன் நாமஜெபம் சொல்லி
   பேருலகமெங்கும் தர்மம் வளரவே
8. வளருகின்ற அந்த மாற்றம் மூலம்
   வையகத்தை வடிவேலன் யான் மாற்றி அருள்வேன்
   ஆறுமுக அரங்கன் மூலமாக
   அற்புதத்தை நடத்தி உலகை காப்பேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே — –சுபம்–